கடவுள் துணை.

சிதம்பரம்.

ஸ்ரீசபாநாதர்பேரில்

# முத்துத்தாண்டவர்

பாடியருளிய

# கீர்த்தநம்-பதம்.

இஃது

புதுவை,

சிவஞானமுதலியார்

பார்வையிடப்பட்டு.

ஒங்கூர்

## முனிசாமிமுதலியார்.

ஒழுகரை

## முத்துசாமிமுதலியா

ரவர்களது.

ஔவைத்தமிழ்விளக்க-அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

# முத்துத்தாண்டவர்பாடியருளிய கீர்த்தநம்-பதம்,

## இவைகளின்-அகராதி


| கீர்த்தநம். | பக்கம். | கீர்த்தநம். | பக்கம். | கீர்த்தநம். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அரகரசிவசிவ | உ௮ | எந்நேரமுமொ | ௬௪ | சிவசிதம்பரமே- | ரு |
| அப்படி... ... | ௬௧ | கண்விழியமற... | ௬௫ | திருக்கூத்திற்கு | -௭ |
| அம்பர ... | ௰௧ | கனவுகண்டெழு- | ௬௭ | தேடித்திரி ... | ௯[illegible] |
| அம்பலவாணர்... | ௰௬ | காணமுத்தி... | உ௪ | தேரோமொ... | ௬[illegible] |
| அருமருந் ... | உ௯ | காணமலிரு... | ௰௬ | தோத்திரஞ் .. | ௯[illegible] |
| அவனேதேவ... | ௯௧ | காணமல்விணி... | உ௫ | நடநங்கண் ... | [illegible] |
| அழைத்தீவா | ௬௨ | கெட்டுப் ... | ௯௬ | நடிப்பவனே ... | உ௯ |
| ஆசைதீரவே ... | ௬௯ | சந்தமுன் ... | ௰௯ | நானேமுழு ... | உ௰ |
| ஆடிக்கொண்டா | ௰௯ | சபையில்... ... | ௬௯ | நானேவலி ... | ௬௬ |
| ஆடியபாதா ... | ௰௭ | சம்போசங்... | ௰௯ | நிருத்தருசெய் | உ௬ |
| ஆடியவேடிக்... | உ௪ | சாரசமிப்படி ... | ௬௧ | நீர்த்துமிருந் ... | ௯௫ |
| ஆடினதெப்படி | ௰ரு | சாமிதரிச ... | ௰௧ | நினைத்துக்கொ. | -௬௧ |
| ஆட்டுக்கால ... | ௰௮ | சிதம்பரமே ... | ௯௯ | நீதயவாயெ ... | ௰௭ |
| ஆராரைக் ... | ௰௧ | சித்தரின் ... | ௰௯ | நேசமேன் ... | ௬௬ |
| ஆநந்தத்... ... | உ௫ | சிவசிதம்பர ... | ௯௬ | பாதசரி ... ... | ௰ரு |
| இவீச்சரமக்க ... | ௯௭ | சிவந்தபாத ... | ௯௰ | பிரித்தாலும்... | ௬௧ |
| இன்னமொரு ... | ௮ | சிவனைமற ... | ௯௨ | பூலோககயி ... | ௭. |
| இன்னம்பிற... | ௯௭ | சிற்சபை... ... | ௧ | பேசுமெ ... | ௬௰ |
| ஈசனே ... ... | ௰ | சந்தாரக்கு ... | ௯௰ | பேசாதே ... | ௯௯ |
| உனைநம்பி ... ... | ௰௧ | சேவிக்கவேண் ... | ௮ | மறவாதிரு... | -௯௨ |
| உன்பாத ... | ௰௨ | சொல்லவாரார்... | ௬௭ | மனதறியா ... | ருக |
| எத்தனைத்த ... | ருய | தணித்திருக்க | -௬ரு | மனதினிற் ... | ௬௮ |
| என்னையென ... | ௰௨ | திருமுத்தப... | ௬௯ | மனமுரு... ... | ருஉ |
| என்றுசென்... | உ௮ | தீர்த்தமுதன்- ... | ௧ | மாணிக்கவா... | ௯௮ |
| ஏபனேநடன... | உ௰ | தூக்கியபாத .. | ௯௰ | மாயவித்தை ... | ௰௭ |
| கண்டபின்க... | உ௯ | தெண்டனிட் ... | ௫௯ | மையல்மிக... | ௬௮ |
| கண்டவர்விண் | ௰௪ | தெரிசனஞ்... | உ௯ | யார்க்குத்... ... | உ௰ |
| கண்டாயோ... | ௬௫ | தெரிசனமே ... | ௯௭ | வருவாரோ... | ௯௧ |
| கலந்துகொ ... | ௯௮ | தெரிசித்துள... | ௰௪ | வேண்டாமி ... | ௬௨ |
| அம்பலத்தாடி | ௬௫ | தெரிவில்... ... | ௬௯ | இச்சிச்சிதம்பர - | ௫௯ |
| ஆடவெடுத்த ... | ௭௰ | என்னகாரிய ... | ௬௭ | தில்லைத்தல ... | ௬௬ |
| இதைவிடக்கு | ௬௪ | ஏன்னதுனி ... | ௬௬ | தெய்வீகஸ்தல... | ௫௪ |
| இன்னமொருதொரு- | ௫௮ | என்னபிழைப்பு | -௬உ | தெரிசிக்கவே, | ௭௧ |
| இன்னம்பயிர... | ௬௬ | எதுக்கிதனை... | ௬௯ | தெரிசித்தபேர் ... | ரு௯ |
| உம்பரம்பா... | ௬உ | எதுக்குதவி ... | ௬௰ | பசந்தனையடை- | ருள |
| உன்முகம்பா | -ருக | எளிந்தப்பசா ... | ௬௮ | பலமந்திரத்திற்- | ௫௯ |
| எந்தத்தலத்தை- | ருரு | ஒருக்காலசிவசி | ருள | பாருங்கள்வந்து- | ௬௭ |
| எந்நாளும்வாச | ருரு | மாலைத்தூக்கிதி... | ருக | வீடுமம்பலமாகு- | ௬[illegible] |

சிவமயம்.

# முத்துத்தாண்டவர்

## சரித்திரம்.

சீர்கருகாவிரி திகழ்சோழநாட்டில், அடியார்க்கருள்செய்யும்பொருட்டுப் பரமசிவம் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிராநின்ற ஸ்தலங்களுள் ஒன்றாகித் திருஞானசம்பந்தசுவாமிகள் திருவவதாரஞ்செய்து ஞானப்பாலுண்டருளிய மகாக்ஷேத்திரமாகிய சீர்காழியில்வீற்றிருக்கின்ற தோணியப்பாருக்கு வாச்சியத்தொண்டுசெய்யும்பேறுபெற்ற குலத்திற்றோன்றித் தாண்டவனென்கிற பெயர்பெற்றுச் சிவநேசத்துடன்வளர்ந்துவருகையில் முன்வினையினால் கர்மவியாதியொன்றுசம்பவிக்க அதனால் தங்கள்குலத்துக்குரியதாகியதொழில் கற்றுக்கொள்வதற்கில்லாமல் காலந்தோறும் ஆலயத்திற்குப்போய்ப் பிரமபுரீசனையுந் திருநிலைநாயகியையுந் தோணியப்பரையும் பயபத்தியுடன் தரிசனம்செய்தும் மற்றைக்காலங்களில் அந்தசிவாலயத்தொண்டு செய்கின்றவர்களாய்ச் சிவநேசத்துடன் சிவநாமகீர்த்தனம் பாடிக்கொண்டிருக்கும்ஒருதாசிவீட்டிற்குப்போய் அந்தத்தோத்திரத்தைக் கேட்டுக்கொண்டிருப்பார் அவள்சுற்றத்தாருக்கும் இவர்சுற்றத்தாருக்கும் அந்நியோந்நியமின்மையாலவள் வீட்டிற்குப்போகிறது சம்மதியில்லாமல்அவரிடத்தில் வெறுப்புற்று ஆதரணைசெய்யாமலிருந்தார்கள், அப்படியிருக்கையில் ஒருநாள்மிகவு மனவருத்தமடைந்து சிவாலயத்திற்போய்ச் சுவாமியையும் அம்மையையுந்தரிசித்துத் தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்துபசியினுஞ்சரீரத்துக்கிளைப்புண்டாகச்சோகத்துடன் வாகனகிடங்குக்குள்போய்ப் படுத்துக்கொண்டு சிவத்தியானத்துடனே நித்திரைசெய்துவிட்டார், அது அந்தக்கோயில் ஸ்தானிகருக்குத் தெரியாமையால் அர்த்தஜாமம் ஆனவுடன்கோயிற்றிருக்காப்பிட்டுக்கொண்டு போய்விட்டார்கள் அவர்கள்போய்விட்டபின்பு சற்றுநேரத்திற்கெல்லாம் நித்திரைநீங்கியெழுந்துமெய்ப்பிணியினாலும் பசிப்பிணியினாலும்வருந்தித் தோணியப்பரைத் தோத்திரஞ் செய்தார், உயிருக்குயிராயெங்கும் நிறைந்திருக்கும்

பரமசிவம் அன்பனது வருத்தத்தைத் திருவுளங்கொண்டு தம்மிட
ப்பாகத் திலுடையவளைப்பார்த்தருள அந்தக்குறிப்பையுணர்ந்துகொ
ண்டு சகல உயிர்களையும்பெற்றவளாகிய உமையவள்கிருபைகூர்ந்து
அந்தக்கோயில் பெரியகுருக்களுடைய புத்திரிய அள்ள குமாரத்
தியைப்போல்வந்து வியசனப்படுகிறவனைப்பார்த்து நீயேன் இப்
படிவியசனப்படுகிறாயென்ன,

தாயே நான் பூர்வம்என்ன பாவஞ்செய்தேனோ தொலையாத
கர்மவியாதி சம்பவிக்க அதனால் வருத்தப்படுகிறதுமன்றி வறுமை
நோயென்ப தொன்று நேரிட்டதனாலும்வருந்துகின்றேனென்று
சொன்னார், அதைக்கேட்டு நீவியசனப்படவேண்டாம் உனக்குச்
சம்பவித்திருக்கிறவியாதியும் வறுமையும்நீங்கி நீசௌக்கியமடைவ
தற்கு நான் ஒரு உபாயஞ்சொல்லுகிறேன் ஆனாலிப்போதுனக்கு
மிகுந்தபசியுண்டாயிருப்பதுபோற் காணுகின்றது அந்தப்பசிதீர
அன்னங்கொடுக்கிறேன் சாப்பிடென்றுகோயில் அந்நம்வட்டகை
யுடன்கொடுக்க வாங்கிப்புசித்துப் பசிதீர்ந்தவுடன் என்றாயேஇந்த
வியாதிநீங்கத்தக்கவகை யெதுவோ அதனைச்சொல்லவேண்டுமெ
ன்னக் கோயிற்குருக்கள் குமாரத்திபோல்வந்திருக்கும்பார்வதியா
ர் நீ சிதம்பரத்திற்குப்போய்ச் சபாநாதனைப்பாடினால் இந்தவியா
திநீங்கிச் சௌக்கிய மடையலாம் இதுதானுபாயமென்றுசொல்லி,

எனக்குப்பாடத்தெரியாதே நானென்னென்றுபாடுவேனெ
ன்றுசொன்னார் நீ அதைக்குறித்து யோசிக்கவேண்டியதில்லை சிற்
சபைக்கெதிரில்நின்று தரிசிக்கும்போது அங்குதரிசனத்திற்குவந்
திருக்குந் திருக்கூட்டத்தாரால்என்னசொல்உண்டாகின்றதோ அ
ந்தச்சொல்லை முதலாகவைத்துக்கொண்டு பாடத்தொடங்கினால்சபா
நாதர் கிருபையினாலே பாடலாக்குண்டாமென்றுசொல்லி உமை
யவள் ஒருஜோதியாக மறைந்துவிட்டாள், அப்படி மறைந்துவிட
வே அச்சமுமிகுந்த துயரமுங்கொண்டு என்னஞ்ஞானத்தினாலேகு
ருக்கள்குமாரத்தியென்றே நினைத்திருந்தேனே லோகமாதாவாகிய
பார்வதியாவென்று தெரிந்துக்கொள்ளாதபாவியானேனே இவ்வள
வெல்லாங்கட்டளையிட்டருளிய என்தாய் தன்னுடையஉண்மையுந்
தெரிவித்தெனக்குநேரிட்டிருக்கிற வியாதியையும் இப்போதேதீர்
த்துவிடலாகாதா சிதம்பரத்துக்குப்போகும்படி கட்டளையிட்டரு
ளவேண்டுமானால் திருவுளப்பாங் கெப்படியோ அதுயாரால்அறிய
த்தக்கது ஒருவராலும் அறியத்தக்கதல்லவென்றுஎண்ணிக்கொண்
டு அதுமுதல் நித்திரைசெய்யாமல் திருநிலைநாயகிசந்நிதிக்கெதிரி
ல்வந்துதோத்திரஞ்செய்துக்கொண்டிருந்தார், அப்படியிருக்கை
யில் உதயகாலமானதால் ஸ்தானிகர் முதலானவர்கள்போய்த் திருக்
காப்புநீக்கி உள்ளேசென்று அம்மைசந்நிதியில்நிற்பவனை நோக்கி



ச்சமீபத்தில்வந்து நீ இங்கேயெப்படிவந்தாய் உன்னை உள்விட்டார்
தேனென்றார்களேயென்று வினவத்தான்வந்ததுந்தனக்குக்கிடைத்
தநன்மையையுஞ்சொல்ல அவர்கள்கேள்விப்பட்டுக்குருக்கள்வீட்
டிலிருந்த வட்டகை யவரிடத்தி லிருப்பதைக்கண்டதுமன்றி அவர்
முகத்திலொருதேஜசு விளங்கி யிருப்பதையும் பார்த்து ஆச்சரியம
டைந்து அன்றுமுதல் முன்போல் தாண்டவனென்று அழைக்க ம
னம்ஒவ்வாமல் முத்துத்தாண்டவனென்று உபசாரமாக அழைக்கத்
தொடங்கினார்கள்.


அப்பால்திருநிலைநாயகி உத்தாரப்படிபொழுது விடிந்தவுட
னேபுறப்பட்டுச் சிதம்பரத்திற்குப்போனார் அப்படிப்போனவர் தில்
லையெல்லையைக் கண்டமாத்திரத்தில் சாஷ்டாங்கமாகப்பணிந்தெ
ழுந்துதோத்திரஞ் செய்துள்ளேபோய் வீதிப்பிரதக்ஷணஞ்செய்
து தில்லைமூவாயிரவர்வாசஞ்செய்யும்வீதியையும்வணங்கி ஆலயத்தி
ற்குட்சென்று சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து நித்தியானுஷ்டான
விதிகளைமுடித்துக்கொண்டு ஈரவுடையுடன்சென்று சந்நிதானத்
தில் அஷ்டாங்க பஞ்சாங்கத்துடன்பணிந்து எழுந்து துதிசெய்து
அன்பின்மிகுதியால் மனமுருகிப் புளகமடைந்து ஆனந்த
க்கண்ணீர்பெருகும்படி பரவசப்பட்டுநிற்கையில் நடேசமூர்த்தி
யின் திருவருளால் தரிசனத்திற்கு வந்திருப்பவர்களில் ஒரு வாக்கு
ண்டாக அதனைப் பல்லவியாகவைத்துக்கொண்டு ஒருகீர்த்தனம் பா
டித்தோத்திரஞ் செய்தார்.

அதாவது (பூலோககயிலாசகிரிசிதம்பரம்) என்று தோத்திர
ஞ்செய்வதைக் கேட்டருளிச்சபாநாதர் திருவுளத்திற் களிகூர்ந்து
அவருக்கிருந்த வியாதியெல்லாம் நீங்கும்படி கடாக்ஷித்து ஐந்து
பொன்பணம்பஞ்சாக்ஷரப்படியின்மேல்வைத்து எடுத்துக்கொள்
ளும்படிகட்டளையிட்டருளினார்அந்தக்கட்டளையைமறுக்க அஞ்சுப
ணத்தை யெடுத்துக்கொண்டு தமக்குநேரிட்டிருந்த நோய்ப்பிணி
தீரும்படி ஆனந்தநடேசமூர்த்தி கடாக்ஷித்தருளிய திருவருளின்
பெருமையை எண்ணியெண்ணிக் களிப்படைந்து பின்னும் பலமு
றை அஷ்டாங்க பஞ்சாங்கத்துடன்பணிந்து தோத்திரஞ்செய்து
பிரியாவிடை பெற்றுக்கொண்டு சீர்காழிக்குப்போய் அன்றுமுத
ல்தினந்தோறும் சபைக்குவந்து அம்பலவாணமூர்த்தியைத் தரிசி
த்து அவ்விடத்தில் என்னசொல்தம்முடையசெவிக்குக்கேள்வியா
கின்றதோ அதையேபல்லவியாக வைத்துக்கொண்டு கீர்த்தனமா
வது பதமாவது பாடிச் சிதம்பரேஸ்வரர்கட்டளையிட்டருளுகின்றப
ணம்பெற்றுக் கொள்ளுகிறவர் ஒருநாள்சிற்சபைக் கெதிரில்வந்

துநிற்கும்போது சபாநாதாகட்டளையினால் அங்குதரிசிக்கின்றதொண்டர்கள் யாதொன்றும் பேசாமலிருந்தார்கள் அப்போது (பேசாதேநெஞ்சே) யென்று ஒருகீர்த்தனம்பாடிக் கட்டளைப்பிரகாரம்பஞ்சாக்ஷரப்படியில் வைத்தபணத்தைப் பெற்றுக்கொண்டு சீர்காழிக்குச்சென்றார் இவ்வாறு நடந்துவருகையில் ஒருநாள் பழயபடி சீர்காழியிலிருந்து புறப்பட்டுச் சிதம்பரதரிசனத்திற்குவருகையில் கொள்ளிடமென்னும் நதியில் அதிகப்பிரவாகம்வந்து ஒருவரும்போகக்கூடாமையாக விருக்கவே சபாநாதனைத் தரிசிப்பதற் கில்லையேயென்னும் ஏக்கங்கொண்டு கொள்ளிடக்கரைமேல்நின்று காணாமல்வீணிலே காலங்கழித்தேனே) யென்றுஒருகீர்த்தனம்பாடினார்- அந்தக்கீர்த்தனத்தைக் கேட்டருளிச்சபாநாதர்திருவுள்ளத்திற்கிருபைகூர்ந்து பிரவாகம்விலகக்கட்டளையிட்டருள அந்த நதியைக்கடந்துவருபவர் மனக்களிப்பினால் (தரிசநஞ் செய்வேனே) யென்றுஒரு கீர்த்தனம்பாடினார் பின்புசிற்சபையில்வந்து சபேசனைக்கண்டவுடன் (கண்டபின்கண்குளிர்ந்தேனென்று ஒரு கீர்த்தனம்பாடினார் அதன்பின்புஒருநாள் வரும்போது மார்க்கத்தில் தம்மைச் சர்ப்பந்தீண்ட அதற்கு(அருமருந்தென்கிற) ஒருகீர்த்தநம்பாடினார்பாடியவுடன்விஷமிறங்கிற்று இவ்வாறு சபாநாதர்பேரில் அநேகங்கீர்த்தனங்களும் பதங்களும்பாடித் தோத்திரஞ் செய்துக்கொண்டிருந்து சபாநாதரதுகிர்பையினால் அனேகமகத்துவம்விளங்கப்பெற்று கடைசிநாளில் (மாணிக்கவாசகர்பேறெனக்குத்தருவல்லாயோவறியேயென்)என்கிற கீர்த்தனம்பாடும்போது சிற்சபையில் ஒருஜோதியுண்டாக அந்தச்சோதியில் விதேகத்துடன் கலந்துவிட்டார்,

சபாநாதர் துணை.

முத்துத்தாண்டவர்சரித்திரம்முற்றிற்று.





கடவுள் துணை

சிதம்பரம்.

## சபாநாதர்பேரில் பாடியது

# முத்துத்தாண்டவர் கீர்த்தநம்

கீர்த்தநம்-இ-ம்-கல்யாணி-ஜம்பைதாளம்

பல்லவி.

பூலோககயிலாசகிரி சிதம்பரமல்லாற்புவநத்தில்வேறுமுண்டோ ✱

அநுபல்லவி

சாலோக-சாமீப-சாரூபசாயுச்சியசபைவாணராநந்தத்
தாண்டவம்புரிவதாற் ... ... ... ... (பூலோக)

[சரணங்கள்.]

(௧) நாலுமஹாமேருவென்னும்நாலுகோபுரநிலையும்-நக்ஷத்ரமணி
களாவொளிர்சித்ரமதில்களும்- மேலுலகையளவிடுதற்போலுயர்
ந்தேவெயில்-விரிந்தகம்பத்திரள்களுங்... ... ... ... ✱

காலுலவுமாயிரக்கால்மணிமண்டபமும்நவ-கங்கையுநிறைந்தசிற-
க்கலைகயின்விசாலமும்-ஆலிலையின்மாலு-மயனுமறியாதபே
ரம்பலமேவுவோர்க்-கற்புதம்புரிதலாற்... ... ... (பூலோக)

(௨) வேதமுதலெனுமூல-நாதர்தாபியுமேரு-வில்லியார்சிவகாம-வ
ல்லியார்கோயிலும்-மாதவர்விண்ணவர் முநிவர்-போதகர்வித்தி
யாதரர்-மாளிகைகள்சூளிகைகளும் ... ... ... ... ...✱

வேதமொருசற்று-மணுகாதகட்டளைகளு-மிரவிபோ விலங்குகின்ற-
விந்த்ரவிமானங்களுங் காதலுற்றேகண்ட-பூதலத்தோரெல்லாங்
காணநாறுயிர்-கல்வேண்டுமென்கையால்... ...(பூலோக)

(௩) மேவார்தொழுந்தில்லை-மூவாயிரம்புநிதர் வீதியுஞ்சைவர் திருவீதியுமடங்களுந்-தாவாதபசிதவிர-வாவாவெனுஞ்சத்ர- சாலையும்பலசோலையும் ... ... ... ... ... ... ... ...

பூவாவிகளும்வயலு-மோவாமலேபெருகு - பொன்னிநதியுந்தெருவு-மன்னியவளங்கண்டு-தேவார்மூவர்முதற்-பாவாணரனைவருஞ்சிவஸ்தலந்தினிதிலகந்-தில்லைவனமென்கையாற்... (பூலோக) (௧)

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணிஏகதாளம்

பல்லவி

சேவிக்கவேண்டுமையா-சிதம்பரஞ்-சேவிக்கவேண்டுமையா

அநுபல்லவி

சேவிக்கவேண்டுமுஞ்-சிதம்பரமூர்த்தியாந் ... ... *
தேவாதிதேவன்-திருச்சந்நிதிகண்டு ... (சேவிக்க)

[சரணங்கள்]

(௧) காராணைமாமுகத்தைந்திகரத்தானைகற்பகராயனைமுக்குறுணியானைச்சீரார்புலியூர்ப்பதிமேலைவாசல்வாழ் - தேவர்சிறைமீட்டுஞ்-சேவற்கொடியானை ... ... ... ... ... (சேவிக்க)

(௨) சிங்காரமானசிவகங்கையின்மூழ்கிச்- சிவகாமசந்நிதி-முன்பாகவேவந்து-பங்காகவேபிரதக்ஷணமுஞ்செய்து-பத்தர்கள்-சித்தர்கள்-பணிவிடையோர்தொழச் ... ... ... (சேவிக்க)

(௩) சிட்டர்பரவுந்திருமூலத்தானைச்-சிற்றம்பலமென்னும்-பேரம்பலத்தானை-அட்டதிக்கும்புகழம்பலவாணனை- ஆண்டவனைத்தில்லைத்தாண்டவராய ... ... ... ... ... (சேவிக்க)

(௪) நல்லதிருவிழா-வருஷித்திருத்தேரும்- நாடெங்குமேபுகழ்- நற்கோபுரநான்குந்-தில்லைமூவாயிரவர்வளர்வீதியுந்- திருமஞ்சநமுமார்கழிதரிசநமுஞ்... ... ... ... ... (சேவிக்க) (௨)

கீர்த்தநம்-இ-ம்-தோடி-ஏகதாளம்.

பல்லவி

இன்னமொருஸ்தல-மின்னமொருகோவில்... ...*
மின்னமொருதெய்வமிப்படியுண்டோ... ... *

அநுபல்லவி

பொன்னம்பலத்தினிற்-பூமலராயன்-போற்றுஞ்சிதம்பரர் *
பொற்பதமேயல்லால் ... ... ... ... (இன்னமொரு)

[சரணங்கள்]

(௧) காசிகமுக்குன்றங்-காளஸ்திரிகச்சி - கமலாலயத்திருவண்ணாமலையுறை-ராசிபமானதெய்வங்கட்கொடுக்கமு - நடனமுமிங்கே தன்னைமுமிங்கே... ... ... ... ... ... (இன்னமொரு)



(௨) பாலானசந்திரசூரியர் மண்டலம்பாரிந்திரன்பதிபற்றியமண்டலம் - பூலோகத்திற்றுக்கைலாசம்வைகுந்தம் - பிரம்மமண்டலத்துப்- புதுமையுமிங்கே... ... ... ... ...(இன்னமொ)

(௩) கரிசற்பிணிகள்-பறந்துபோகுஞ்- சிவகங்கையின்மூழ்கிக் - கநகசபைவந்து-தெரிசித்தளவினிற்-றேவனுமாவன்-தெரிசித்தாரைக்கண்டாற்றேவனுமாவன் ... ... ... (இன்னமொரு)(௩)

கீர்த்தநம்-இ-ம்-கல்யாணி - ஜம்படைதாளம்.

பல்லவி.

தீர்த்தமுதன்மூர்த்தியுந் - தலவிசேஷமுமெங்கள் -சிவசிதம்பரத்திற்றுனே

அநுபல்லவி.

தீர்த்தநஞ்செய்யமெய்ப்-பொருண்மூன்றுமொன்றென்று*
கேண்மையோடுவேதா - கமம்பகருமாகையால் ... (தீர்த்த)

[சரணங்கள்.]

(௧) தெரிசித்தப்போதந்த-பிரமனேந்நாளும்-செலுத்தும்பாக்கியங்களுண்டாம்-பரிசித்தபோதலகு-பதிலும்மீட்சிக்கும்பதுமவிழியோனுகலாம் உருசிக்கும்பாணி மன்பாகவுட்கொள்ளிலுருத்திரன்பதவிபெறலாம்-வருகிற்பராநந்தத்தீர்த்தமதிலாடவேமகேஸ்சுரனுமேயாகலாம் ... ... ... ... ... (தீர்த்த)

(௨) கல்லுமுதன்மணல்களுந்துகள்களும்லிங்கமெனக்-கருதும்வேதங்களெல்லாந்தில்லைதனிலுண்டான குளம்படியினியெல்லாஞ்சிவகங்கையென்றுசொல்லலாங்-குல்லைமார்புகழ்ந்திய- கூபங்களாநந்தக்-கூபமென்றேபகரலாம்-வல்லநடராஜர்-பதங்காணுமமேலதலந்தில்-வசித்தவருமுத்திபெறலாம்... ... ... .. (தீர்த்த)

(௩) சிந்தைமகிழ்சம்பந்தர்-தரிசிக்கயாவருஞ் - சிவசுரூபமான-திறமும்-நந்திமுதவிந்திரர்மூவாயிரம்புநிதரும் - நாரணருந்தொழுதேத்தவே-வந்துதெரிசித்தவர்க்கு-மாறுதபேரின்ப-வாழ்வுதருகின்றபதமுங்-கந்தமுறுகோதைச்சிவகாமிபங்கி-நடனமிடுகடவுளருள்வடிவாகையால் ... ... ... ... ... (தீர்த்த) (௪)

கீர்த்தநம்-இ-ம்-நீலாம்புரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

சித்சபைதனிலேகண்டுகொண்டேனென்றும்...*

அநுபல்லவி.

அற்புதக்கூத்தனைநாடி-அவனையெங்குந்தேடி (சித்ச)

[சரணங்கள்.]

(க) வையந்தருஞ்சிவ-காமிமாலேகொன்றை-மாலேயென-வணிந்தா
லை-மாந்தர்க்குமுன்னாலே-செய்யும்நாள்வாசனையின்மேலே கட
ந்-திரையெனவேவரும்பிரவிதீரும்வகையாலே ... ... (சிற்ச)

(உ) அடியவருக்கருள்-புரிகுவானைப்-பண்டுவரிபூஜைக்குவந்தடன்
சக்கரமளித்தோனைத்-தடியினடையாண்மலே - மகள்பங்கோனை-
அன்பாய்த்-தொழுவார்க்குக்-கதிகொடுக்குந்தூயவெளியானை (சி

(௩) தேவர்வான்கோனயன்மாலாதி-மெய்ம்மை-திகழ்மூவாயிரவரி
லொருவ-னென்றநீதி-மூவர்பாடற்கருள்நாதி - வந்து- மூவுல
குந்தொழத்தில்லைதனிலடஞ்செய்ஜோதி... ... ... (சிற்ச)

(௪) முநிவர்புரிதவமகிழ்ந்தேயன்பு-இன்ப- முடிவிலாவருளருத்த
முகமேலநாவென்றுதனியேநீபதியெனவின்று நின்ற - சாட்சி
யைக்கண்ணுற்கநகசபையருகேநின்று... ... ...(சிற்ச)(சி)

கீர்த்தநம்-இ-ம்-ஆஹிரி-ஆதிதாளம்.

பல்லவி.

நடநங்கண்டபோதேயென்றன் - சடலஞ்செய்தபாக்கியமையா

அநுபல்லவி.

விடமணிந்தகண்டாமன்றன்-மேவுமம்பலவாணவுன் ... (நடநங்)

[சரணங்கள்.]

(க) அரியயனுந்தேடிக்காணு-வருவமாய்நின்றகாரணு- மருமலர்ப்
பதங்கொண்டுருகுமன்பர்சிந்தையொன்று ... ... (நடநங்)

(உ) அன்னைதந்தைநீயேயென்றேயுன்னையேமிகநம்பினேன்-என்
னையேநீகாக்கவேண்டுஞ்-சொர்னசபைநடராஜா ... (நடநங்)

(௩) பதஞ்சலிவியாக்ரபாத - ரிதயம்புகுந்தாண்டவனே-நிதம்பிரி
யாச்சிவகாமி-நேசனேசிதம்பரேசனே ... ... (நடநங்)(௩)

கீர்த்தநம்-இ-ம்- சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

ஈசனே-கோடிசூரியப்பிர-காசனே-கநகசபை*

அநுபல்லவி.

வாசனேயானந்தநடராஜனே... ... ... (ஈசனே)

சரணங்கள்.

(க) அதியேனெஞ்சினேசம்-பிரியேன்வருங்கருமங்-குதியேனதி
வில்லாதபிரியேனென்னைநீயாளாய்... ... ... ... (ஈசனே)

(உ) நினையேதுணைவேடமும்-புனையேன்- சிவகங்கையினையேன்
கொடியபதி-வினையேதுய்யவேயாளாய்... ... ... (ஈசனே)



(௩) துதியேன்வணங்காவஞ்ச - மதியேனென்றுவஞ்சபா-பதியே
நம்பினேன்சிவ-கதியேதந்தென்னையாளாய்... ...(ஈசனே)(௪)

கீர்த்தநம்-இராகம்-சுருட்டி-ஜம்பைதாளம்.

பல்லவி.

அம்பரசிதம்பரம்பர-சதாநந்தவடிகன்-மறவாதருளு- மநுதிநமு
[மே

அநுபல்லவி.

செம்பொன்மலைச்சிலைவளைத்ததிவ்யபரமாநந்தசம்போ
சிவசங்கர-ஸ்ரீதாண்டவ-நடேசா ... ... (அம்பர)

சரணங்கள்.

(க) கங்கைமதியவரசைசையைக் காதிற்குழையசைச்- செங்கைமழுத்
துடியசைச்—சைசவஜடையசையப்—பொங்கு புலியதளசையப்-
பொற்பாதச் சிலம்பசைய—மங்கைசிவகாமவல்லி—மகிழ்நடம்
புரியும்... ... ... ... ... ... ... ...(அம்பர)

(உ) நின்மலநிராலம்ப - நிர்க்குநிறஞ்சந—சின்மயானந்தபர—சித்
குணசொரூபா-வன்மலக்கோணீக்கியருள்- வாரியுறவேயென அ
புன்மையுறவுமைக்காணப்பொதுவிநடம்புரியும் ......(அம்பர)

(௩) அங்கமறையாகமங்கள் - சொன்னவிதிவழுவாமல்—சிங்காரமா
மெய்கள்-செய்துதிநந்தினமு-மங்காதநீறுபுனை—வைதிகமூவா
யிரவர்நங்கோவென்றேபரவநாளும்நடம்புரியும் (அம்பர) (அ)

கீர்த்தநம் - இராகம்-பந்துவராளி - ஏகதாளம்.

பல்லவி.

நீதயவாயென்னையாளா-யிரு - மாதவர்பாடுங்கங்காளா

அநுபல்லவி.

தாதகிகுடியதோளா-உமை-காதலாகுஞ்சிதத்தாளா...(நீதய)

சரணங்கள்.

(க) ஓடிகடல்விடமுண்டநேயா-சிறு-புலியினதனுடைதூயா - மெ
விரிமடியவர்சகாயா-பதஞ்-சலிபுலிடணிநடராய ... ...(நீதய)

(உ) காலனைவதைசெய்தகாலா - புலிப்-பாலனையாண்டகபாலா- வே
லனைத்தருமறகூலா-வைந்து-கோலனைவென்றதிரிசூலா (நீதய)

(௩) மூவர்பரவியவிநோதா-திரு- நாவலூரன்விடுதூதா - யாவருப்
நம்பினபாதா - மகாதேவகநகசபைநாதா ... ... (நீதய) (௩)

கீர்த்தநம்-இராகம் - குறிஞ்சி - ஏகதாளம்.

பல்லவி.

உன்னைநம்பினேனையாசரணம் - நாகம்*

அநுபல்லவி.

புனைசம்போநடராசாபுலியூர்வாழீசா ... (உனை)

சரணங்கள்.

(க) இருவர்தம்பிசைகொண்டகாதா-தித்தியெனநின்று - நடஞ்செ
ய்யுமிங்கிதப்பொற்பாதா- திருநாவுக்கரசன்விடுதூதா- தில்லைச்சிவ
காமிபொருபாகா-சிதம்பரநாதா ... ... ... ... (உனை)

(உ) மழுவுழைதரிக்கின்றகையா-கொன்றை - மலர்மாலையணிகின்ற
வடிசுடர்மெய்யா- எழுபுவிதுதிக்கின்றதுய்யா - வண்டமிட்டமாயி
ருந்தின்பமுடனுறைமையா ... ... ... ... ... (உனை)

(ங) நெடியமாலயன்தேடிக்காணு-தெங்கும்-நிறைந்த-காவேவும்
பெல்லாம்மணிநிதிம்பூணு-அடியவர்தொழுந்தமிழ்வாணு-தில்
லையம்பதிநடராஜஅம்பலவாணு... ... ... ... (உனை) (ரு)

கீர்த்தநம் - இராகம்-ஆனந்தபைரவி - ஏகதாளம்.

பல்லவி.

என்னையெனக்குத்தெரியச்சொல்வாய்-தில்லைப்பொன்னம்பலத்த
[ரசே

அநுபல்லவி.

தன்னையறியமதிவதுநீ - சற்றுந் - தப்பவொண்ணுதிப்
பிபா-சாமிசமயம்... ... ... ... ... ... *

சரணங்கள்,

(க) பூதமுநானல்ல-பொறிபுலநானல்ல-ஓதுமநாதி- யொருநான்கு
ம்நானல்லாபோதக்கருவி - புறம்பல்லவுள்ளல்ல- வாதமுநானல்ல
வென்றமயங்கும்... ... ... ... ... ... ...(என்னை)

(உ) ஒளியல்லவிருளல்ல - உடலிநிறைவதல்ல - வெளிறாகறுப்பல்ல-
விளக்கொத்ததல்ல-அளியுமவிதையல்ல- வவிதைப்பிரிவதல்ல
தெளிவுமதிவுமல்ல - தெளியாததல்ல ... ... ... (என்னை)

(ங) பாசமுநானல்ல-பதிபசுநானல்ல-பேசிலனுவுமல்ல- பெரியவுரு
வுமல்ல-ஈசரிலங்க-விலங்கும்பொருளல்ல- கோசரமேயேகதேச
முனுமல்ல... ... ... ... ... (என்னை)

(ச) சேர்ந்துவருவதல்ல-சேராதிருப்பதல்ல - ஓர்ந்துகளிப்பதல்ல-
சோராதிருப்பதல்ல- போந்துவருவதல்ல - போராத்தனியுமல்ல-
தீர்ந்தவுயிரோது-தில்லைநடேசா ... .. (என்னை) (யக)

கீர்த்தநம்-இராகம்-பரஸ்-ஆதிதாளம்.

பல்லவி,

உன்பாதமேதுணைக்ரபைசெய்யா - யஞ்ச
லென்பாரெனக்குவேறில்லைமெய்யாய் ... *

அநுபல்லவி.

அன்பாயம்பலத்தாடுமையா-உனக்கடி-யெனவொருவர்- பந
க்சய-னன்முத-வினைதீ-திநம்நிறை-கநகசபேசா... (உன்)



சரணங்கள்,

(க) பலதெய்வமுந்தெய்வமென்க்குறியேன்-நின்னை-பலதென்ப
திலொன்றையுமறியேன்- வலதெள்ளளவுமில்லாச்சிறியேன்-
விய-விருவினை-யிருளற- வருளமு-ஈருமூல - கருமகிழ் - திரு
ராஜா ... ... ... ... ... ... (உ

(உ) என்னளவினிற்சித்தமிரங்காதோ-வந்து-சொன்னதென்
பராமுகமேதோ-உன்னுக்குத்தவுவதெப்போதோ - உடல்வி
படவட-ரடல்வினை-கெட-வொரு- மடவர - லொடுமிடும் - நட
விநோதா ... ... ... ... ... (உ

(ங) இனியவசெவொனக்கென்குறைநீரா - யோகமுநிவோ
வித்தவுபகாரா- தனியாம்பேரும்பெற்றபுலியூரா- சபமிகு-
தலி-முயலக-னெளியம-ளியபதமருள்தம-நயசபைநாதா (உ

கீர்த்தநம்-இ-ம்-சௌராஷ்டிகம் - அடதாளம்.

பல்லவி,

சந்ததமுன்பாசேவைதந்தென் மேற்க்ரபைபாராய்

அநுபல்லவி

செந்திரமேவும்புலியூர்வாழ் சிற்சபைநடேஸ்வாமி... (சந்த)

சரணங்கள்

(க) பண்ணிலம்போதையளிக்கப்-பாவியேன்வினையொளிக்கக்கண்
ணநந்தந்துதிக்கக்-கண்டென்மனதுட்களிக்கச்... ... (சந்

(உ) இந்திரப்போர்வைப்புமாடத்-தேவர்கள்நான்மறைபாட-ஐந்
மூத்திருவம்நாட - வணிமலர்தூவிக்கொண்டாளச்... ...(சந்த

(ங) பங்கயத்தயன்மால்காணுப் - பாதனேபொற்பணிபுனு-தங்
வில்லாகுநாணு - சம்புவேயம்பலவாணு... ... (சந்த) (யா

கீர்த்தநம்-இராகம்-காம்போதி- அடதாளம்,

பல்லவி,

சித்தரின்னமுன்போபூலோகத்திற் - சித்தரின்னமுன்போ

அநுபல்லவி,

அத்தர்தில்லைவாழு-மம்பலவாண-னாநந்தக்தாண்டவரா
யரல்லாமற் சித்தரின்னமுன்போ... ... ... ... *

சரணங்கள்,

(க) ஒப்பறு சித்தைகளெப்படியுலகத்தி-லுடலேசெப்பாக
பந்தாகச் - செப்பிடுவித்தைகள்விளையாடியபின்பு- செ
லை பந்தமில்லையென்றெரிக்குஞ்... ... ... (சித்தரின்னமுன்

(உ) இதஞ்சொல்லிக்கின்னரர்கிம்புருடர்பாட - விடர்தவிலம்பிளை
கண்களிகூடப்-பதஞ்சலிவெம்புலி யஞ்சலிபண்ணப்- பதஞ்ச
லிபாமதிபதஞ்சலிபண்ணுஞ்... ... ... (சித்தரின்னமுன்

(ங) மாலொடுபிரமனுந்தேடரிதான - மசர்ப்பாதங்கண்டுவணங்கித்
தெரிசிக்கச்-சாலோகசாமீபசாரூபசாயுச்யந்- தந்தருள்தாண்ட
வராயசல்லாமற் ... ... ... (சிந்தரின்னமுண்டோ) (௰௪)

கீர்த்தநம்-இராகம்-கல்யாணி-ஏகதாளம்,

பல்லவி,

காணுமலிருந்தாலென்-கலக்கந்தெளியாதே,

அநுபல்லவி.

பூணரமரவணிந்த-பொன்னம்பலத்தானை- காணமலிருந்தாலென்

சரணங்கள்.

(க) திரிபுரத்தைபெரித்தானைச் - செங்கையின்மான்தரித்தானைக்-
கரியுரித்துப்போர்த்தானைக்-கங்கைமுடித்தானை - அரியயனுந்
துதித்தானை-யஞ்செழுத்தாயுதித்தானை - உருவிலியையெரித்
தானை-யொளிவெண்ணீற்றானைக்... ... ... (காணும)

(உ) தலைமாலைதரித்தானைத்-தக்கன்சிரந்துணித்தானை- உலகெலாம்
நிறைந்தானை-யுவமையில்லானை - படைதநுவாயவனைத்தானை-மற
லியிழயுதைத்தானைக்-கலைமதியைப்புனைந்தானைக்- கண்மூன்று
டையானைக்... ... ... ... ... (காணும)

(ங) நாலுகோபுரத்தழகும்- நன்மனதின்மண்டபத்தழகும்-சிலபி
ரந்தெருவழகுஞ்-சிவகங்கையழகும் - ஆடமிடத்தினிலழகும்-
மாடுமம்பலத்தழகும்-பாலின்மொழியுமையழகும் - பரமாநந்
தத்தழகும்... ... ... ...(காணும) (௰௫)

கீர்த்தநம் - இராகம்-ஆகிரி-ஏகதாளம்.

பல்லவி.

கண்டவர்விண்டிலரே-யநுதினம்-விண்டவர்கண்டிலரோ

அநுபல்லவி.

கண்டவர்விண்டிலர் - விண்டவர்கண்டிலர்
அண்டரண்டங்கடந்...தாதிசோதிபாதந் (கண்டவர்)

சரணங்கள்.

(க) முத்திபத்திசத்தி - முப்பால்விளைவதல்ல-நெற்றிசொற்றுமொ
ருநிலைமைதானுமல்ல- தக்தெய்யென்றுதாள-மத்தளமதிரவே-
தித்தியென்றுமன்றுளாடுந்திருக்கூத்தை... ... (கண்டவர்)

(உ) அந்தக்கரணமொருநான்குசத்தா - யைந்துமடங்கியெதிவுடன்
கூடிச்-சந்திக்குநின்றருள்- சற்குருவும்போற்றும்- அந்தமதாகி
ய-வானந்தநடனத்தைக்... ... ... ...(கண்டவர்)

(ங) ஒவ்வதானுமல்ல-வெளவ்வுமிவ்வுமல்ல - நவ்வுஞ்சிவ்வுமல்ல-மாத
நடுவணையிற்-சிவ்வுமவ்வுமல்ல-சேர்ந்தவட்டமல்ல-அவ்வுமுவ்வும
ம்ல்ல-வாதிகூத்நடநங்... ... ... ... ...(கண்டவா) (௰௬)



கீர்த்தநம்-இ-ம்-ஆனந்தபைரவி- ஆதிதாளம்.

பல்லவி

பாததரிசனஞ் செய்யும்போதே - செய்த
பாவம்வேருண்டுதிஜபலமானதே ... ...*

அநுபல்லவி.

வேதம்பரவுந்தில்லை-மன்றுண்மீதேமெத்த-மிடுச்குள்ளகாளியுந்
டுக்கிடவுலகமும்-நடுக்கிடத்திகுர்திமென்றடுக்குடனடித்திடும்(பா

சரணங்கள்

(க) பத்தியுடனேபூஜைபண்ணும்பாலன்-தன்னைப் - பற்றிப்பிடிக்
வந்தபாசக்காலன்-தக்குவிழவேயுதைத்தருள்காலன் - வெற்றி
தாண்டவம்புரிந்தென்னை-யாண்டவனெனவரு-மாண்டவ
ம்ஜபயும்-பூண்டவர்சிலம்பணி... ... ... ... (பாததரி

(உ) சுந்தரமூர்த்தியார்தமிழுக்காக- வும்பர் - தொழுதிடத்தூது
சைந்தன்பாக-அந்தமின்புரவைக்குமுன்பதாக-வந்த -
வதிரிதிபுரமெரி-படநகை-புரிகரதர்-பரமாசியமான (பாதத

(ங) ஆலவிடமருந்துஞ்சர்வேசன்-கங்கையணிந்தவண்மாகயிலை
மலைவாசன்-மாதுக்கிளையவுமைமகிழ்நேசன்- சதுர் - மறைவரி
முடிமிசை-புறைபவனமூல்நிகக்-கனகவிடவரவோடு- பிறைபை
யுமணிபவன்... ... ... ... ... ... (பாததரி) (௰எ

கீர்த்தநம்-இ-ம்-கல்யாணி-ஏகதாளம்

பல்லவி

ஆடினதெப்படியோ-நடநம்திரடின்தெப்படியோ.

அநுபல்லவி,

தேடியமெய்ப்பொருளோ வளமேவுஞ்- சிதம்பரத்தேயொரு
சேவடிதூக்கிநின்... ... (ஆடின)

சரணங்கள்

(க) ஒன்றல்லரண்டல்ல-ஒன்றிரண்டுமல்ல- நன்றல்லதீதல்ல- நாதவி
ந்துமல்ல-அன்றல்லவின்றல்ல-வாதியந்தமல்ல-மன்றுண்மரகதவ
டிவல்லிக்கொண்டாட... ... ... ... ... (ஆடினதெப்ப)

(உ) ஆணல்லபெண்ணல்ல - வன்நியலியுமல்ல - காணரூபமல்ல- கா
ணுதரு மல்ல-கேளல்லவேயொரு- தேவர்க்குள்ளேதேவ- வா
ணுதற்பச்சை-படர்ந்தகொண்டாட... ... (ஆடினதெப்)

(ங) பூதங்களல்ல-புறம்பல்லவுள்ளல்ல - வேதங்களாலே - விளக்கும்
பொருளல்ல- ஆசவக்போலே - பசையும்வடிவல்ல - மாதுமை
யாள்பச்சை-வல்லிகொண்டாட... .. ... (ஆடினதெப்ப)

(ச) பஞ்சவர்ணமுமல்ல-பஞ்சபூதமுமல்ல-நெஞ்சிந்திரியமல்ல- தி

ஊவிர்கனவுமல்ல - அஞ்சுமுகமுமல்ல - நெஞ்சி நினைவுமல்ல-
வஞ்சிமரகத-வல்லிகொண்டாட ... ... (ஆடினதெப்ப) (டுள)

கீர்த்தநம்-இ-ம்-மோகனம்- ஏகதாளம்

பல்லவி

ஆடிக்கொண்டாநந்தவேடிக்கைகாணக்கண்ணாயிரம்வேண்டாமோ

அநுபல்லவி

நாடித்துதிப்பவர்-பங்கிலுறைபவர்,- நம்பர்திருச்செம்
பொன்னம்பலவாணர்... ... ... ,, (ஆடிக்)

சரணங்கள்.

(க)பங்கபபாதச்சிலம்பசைந்தாடப் பாதச்சதங்கைகள்கிண்கிணெ
ன்றாட-பொங்கமுடனேயுரித்தத்தரித்த-புலித்தோலசைந்தா
டச்-செங்கையிலேந்திய மான்மழுவாடச்- செம்பொற்குழைக
ண்முயலகனுடக்-கங்கையிளம்பிறைச் செஞ்சடையாடக்- கநக
சபைதனிலே... ... ... ... ... ... ...(ஆடிக்)

(உ) ஆரநவமணிமாலைகளாட-வாமேரகம்படம்விரித்தாடச்-சிரணி
கொன்றைமலர்த்தொடையாடச்-சிதம்பரத்தோராட- பேரணி
வேதியர்தில்லை மூவாயிரம் - பேர்களும் பூசித்துக்கொண்டுநின்
றாடக்-காரணிகாளிபெதிர்த்துநின்றாடக்-கநகசபைதனிலே (ஆ

(ங) நிர்த்தகணபதிவேலர்நின்றாட-நின்றயன்மாலுட னிந்திரனுட-
முப்பத்துமுக்கோடி தேவருடனே முனிவரும்நின்றாட- மெய்
ப்பத்திமேவும்பதஞ்சலியாட-வியாக்ரபாதரும் - நந்தியுமாடத்-
கொப்புநிமகாதாள் சிவகாமியம்மையுங்கூடவேநின்றாட (ஆடிக்

கீர்த்தநம்-இ-ம்-சௌராஷ்டகம்- ஆதிதாளம்,

பல்லவி

சம்போசங்கரமஹாதேவா-சதாசிவ-சம்போசங்கரமஹாதேவா*

அநுபல்லவி.

செம்பொற்சபையினடஞ்செய்புஞ்சிதம்பர ஹரசரசிவசம்போ

சரணங்கள்

(க) அரிமாற்பிரமந்தேரிபோனே —சித்தந்தெளிந்த—வன்பர்தமக்
குரியோமேன- புவனங்களில்- திரிபுரமப்புர மெரிசெய்த சச்சி
தாநந்தபர ... ... ... ... ... ... (சம்போசங்கர)

(உ) அனவாதத்தாண்டவாரயா-கைலைவெற்பையகைச்சதகனேரட்சி
த்தநேயா-மருவார்கொன்றை- புனலோடுமதி - அம்பைபடனேயு
ஞ்சிற்பரஹர ஹரசிவ ... ... ... ... (சம்போசங்கர).

(ங) இருமுனிவர்க்கநுக்ரம்நாதா-மூவாயிரவர்-ரொன்றும்ர்ச்சனை செ
ய்பொற்பாதா-வேலையாண்டருள்-திரிபுரசிவகாமிதினமும்மரு
வியஹரஹரசிவ ... ... ... ... (சம்போசங்கர) (உம்).



கீர்த்தநம் இராகம்-நாதநாமக்கிரியை- ஏகதாளம்.

பல்லவி

ஆடியபாதா-இருவர்- பாடியகாதா

அநுபல்லவி

நீடியவேதா-தில்லை-நிதர்த்தவினோதா (ஆடியபாதா)

சரணங்கள்

(க) இருமுநிவருமொரு - நிருபனுமருகினில்-உருகியுருகிமனப்
ரஹரவெனவே... ... ... ... ... ... (ஆடியபா

(உ) அந்தர துந்துமி -முந்து அடியுந்தவில் - திந்திமிதிமிதிமிதிந்தி
யெனவே... ... ... ... ... .. .. (ஆடியபா

(ங) கும்பமுலையுமையாண்-சம்ப்ரமத்தொடுபேண-உம்பர் தொ
வருசிதம்பரந்தனில்... ... ... ... (ஆடியபாதா) (உ

கீர்த்தநம்- இராகம்-கர்நாடகசாரங்கம்- ஏகதாளம்

பல்லவி,

தெரிசித்தளவின்-முக்திபெறலாம்- புலியூரானைத்
தெரிசித்தளவின்-முக்திபெறலாம்... ... ...*

அநுபல்லவி

தெரிசித்தளவின்முக்தி-பெறலாம்- புலியூரானைத்
திகம்பரநடம்புரிசிதம்பரதேவனைத்...(தெரிசித்)

சரணங்கள்

(க) அரனைமன்மதனைச்சங்-கரனைமான்மழுவேந்துங்-கரனைச்சடை
யிற்கங்காதரனைப் - பரனைச்சுருவ தயாபரனைப் - பராதிகழ்
னைத்தில்லையில்வாழ்சிதம்பரனைச்சங்கரனைத்... ...(தெரிசி

(உ) மாயனையாண்டவு-பாயனைமலைநகி- நேயனையழிவில்லாக் கா
னைத்து-தாயனைவைபோக-ராயனைநால்வேத-வாயனைத்தாண்
வராயனைச்சிவாயனை ... ... ... ... ... (தெரிசி

(ங) ஈசனையம்பர-கேசனையதிகப்ர-காசனைக்கைலாச- வாசனைப்
சனைசெயுமன்பர்-நேசனைத்திரிபுர-நாசனைச்சிவகாமி-நேசனை
ச்சபேசனைத்... ... ... ... ... ... (தெரிசித்)(உ

கீர்த்தநம்-இ-ம்-கேதாரகௌளம் ஏகதாளம்

பல்லவி

மாயவித்தைசெய்கிறானே-யம்பலவாணன்-மாயவித்தைசெய்கிற
[வே

அநுபல்லவி

மாயவித்தைசெய்கிறான் - காயமொன்றெடுத்துக்கொண்டு
நேயமானவெளிதன்னிலுபாயமாய்கூடித்திரிந்து...(மாயவி)

சரணங்கள்

(க) உண்டுபண்ணிவைக்கிறான்-கொண்டுபோன்டுபோகிறான்: ந

ழுக்கும்நித்தம்- நடுவாயிருக்கிறான்- பஞ்சநாளுவெளியெங்
கும்-பாரெங்குங்காரணவொன்றான்-அண்டர்தொழ-வம்பலத்தி
லொண்டிகட்டியாடிக்கொண்டு... ... ... (மாயவித்தை)

(உ) உண்ணுகிறானுறங்கிறான் - உருவாந்தேரேட்டுறான் சங்கீதத்
தைமீட்டுறான்-தானேதீபங்காட்டுறான்-மங்கையுடன் கூட்டுறா
ன்-மடலிக்கண்கள்காட்டுறான்-அங்கலிங்கபீடமாக- விளங்குமங்கு
மாயனைசந்து... ... ... ... ... ... ...(மாயவித்தை)

(௩) கூட்டுறான்வெகுசன்னட-மூட்டுறான்தத்துவத்தின்-மாட்டுறா
னுலகம்பாராட்டுறான் பின்னையுமோர்- ஆட்டிலடையம்பலத்தில்
ஞ்சாமிமெய்க்கிறவன்- காட்டுமெய்யிலாறுக்கப்பல் - வீட்டிலே
குடியிருந்து .. ... ... ... ... ... (மாயவித்தை)

(௪) மண்ணுமல்லவிண்ணுமல்ல-வாயுவுமல்ல-தேய்வுமல்ல பெண்ணு
மல்லவாணுமல்ல-பேசாமனின்றவிடம்- ஒன்னிலிருந்தருஞ்சையு
முண்டு பண்ணிக்கொண்டவன் - கண்மாயக்காரனென்றுஞ்ஞைக
க்குள்ளேயுஞ்சிக்காமல்... ... ... ... (மாயவித்தை) (உ௩)

கீர்த்தநம்-இ-ம்-பியாகடை-ஏகதாளம்

பல்லவி

ஆட்டுக்காலைத்தாரும்-என்சாமி-வா-தாட்டுக்காலைத்தாரும்

அநுபல்லவி

ஆட்டுக்காலைத்தேடியம்பலவாணரோ - காட்டுப்புலியும்
பாம்புங்காத்துக்கொண்டிருக்குது... ... (ஆட்டுக்)

சரணங்கள்

(க) கின்னரர்கிம்புருடராதியர்வீணையர்-கெருடகாந்தருவர்சித்யவி
த்யாதரர்-தன்னிகரில்லாததந்திரர்மந்திரர்-சரணஞ்சரணமென்று தி
ருகைகூப்பினிற்கப்-பொன்னின்விமானத்தார்சிவிகைவாகனத்தர்பூத
கணுமிபர்போற்றியடி-விரும்ப- அன்னவாகநத்தன் விண்ணிலேற
வாயுருட்டுக்காலைத்தேடிக்கோட்டிப்பன்றியாயினான்...(ஆட்டுக்)

(உ) முப்பத்திமுக்கோடி தேவர்குழாங்களும்முனிவ சரணவரும்ரி
ஷிகளனைவோருஞ்-செப்பமான சந்திராதித்தருங்கூடிச் ஜெயஜெ
யென்றுபாதந் தம்மைத்தேடுகிறார்கள்-ஒப்பில்லாதகாளி யம்பலத்
தேதனின்றுவுன்றன் றனைக்கண்டுதொந்தோமென்றுகிறாள்-மெய்
ப்பதாகுமந்தக்காலை யெனக்குத்தந்நால்-வேண்டு மறுபத்தஞ் சா
ம்விளையாட்டாகுஞ்சாமி... ... ... ... ... ... (ஆட்டுக்)

(௩) ஆக்கியகிஷைவளர்திக்குப்பாலகருமாதிவைரவரும்நர்த்தனைவரு
ந்-தாக்கியசாவரசங்கமகோடியுஞ்சந்தித் துப்பாதத்தைக்காத்துக்
